

வேலூர் மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்துக்கு கழக பொதுச் செயலாளரும் நீர்ப்பாசனத்துறை அமைச்சருமான துரைமுருகன் மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். அருகில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார்எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் , முன்னாள் அமைச்சர் டாக்டர் வி.எஸ்.விஜய், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, ஒன்றிய கழக செயலாளர் சி.ஞான சேகரன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் நூருல்லா, மாநில தேர்தல் பிரிவு துணை செயலாளர் சுப்பிரமணி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் டி.தேவராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, வேலூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று (15.09.2023) கீ.வ. குப்பம் பேருந்து நிலையத்தில் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், நாடாளுமன்ற உறுப்பினர் து.மு.கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார், ப.கார்த்திகேயன், திருமதி.அமுலு விஜயன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் திருமதி.சுஜாதா ஆனந்தகுமார், மாநகராட்சி ஆணையாளர் பி.இரத்தினசாமி, மாநகராட்சி துணை மேயர் சுனில் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.த.மாலதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.


### கலைஞர் நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு

# கிராமங்கள்தோறும் தி.மு.க. கொடியேற்றுவது பெருமையாக உள்ளது!

## என்.பஞ்சம்பட்டியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

*ஆத்தூர், செப். 16 -*

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கிராமங்கள் தோறும் தி.மு.க. கொடியேற்றுவது பெருமையாக உள்ளது என்றும் திமுகவை தொடங்கிய அண்ணாவின் பிறந்த நாளில் தமிழகத்தில் உள்ள இல்லதரசிகளுக்கு திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கும் ரூபாய் ஆயிரம் மகளிர் உரிமைத்தொகை மூலம் விடிவு காலம் பிறக்கிறது என என்.பஞ்சம்பட்டியில் நடைபெற்ற தி.மு.க. கொடியேற்று விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.



திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் என்.பஞ்சம்பட்டியில் மறைந்த முன்னாள் முதல்வர் தமிழின காவலர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பாஸ்கா மைதானம் முன்பு பிரம்மான்டமான தி.மு.க. கொடிக்கம்பத்தில் கொடியேற்றும் விழா நடைபெற்றது. விழாவிற்கு ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளை யார்நத்தம் முருகேசன் தலைமை தாங்கினார். ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், ஊராட்சிமன்ற தலைவர் பாப்பாத்தி நாகராஜன், துணைத்தலைவர் ஜோசப், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மருதாம்பால் ஆல்பர்ட் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் மெல்வின் வரவேற்று பேசினார்.

நிகழ்ச்சியில் பிரம்மாண்டமான கொடிக்கம்பத்தில் தி.மு.க. கொடி யேற்றிவிட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கிவிட்டு பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புதிய கொடிக்கம்பங்களில் தி.மு.க. கொடியேற்றுவது மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கிறது. என். பஞ்சம்பட்டி கிராமத்தில் ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் என்னற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தியுள்ளோம். அறிஞர் அண்ணாவால் தொடங்கப்பட்ட தி.மு.கழகம் இன்று இந்திய அளவில் பெருமைப்படக்கூடிய இயக்கமாக செயல்பட்டு வருகிறது. குறிப்பாக அவருடைய பிறந்தநாளான செப்டம்பர் 15ம் தேதி திராவிடமாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிருக்கு வழங்க உள்ள கலைஞரின் மகளிர் உரிமைத்தொகை பெண் சமுதாயத்தை முன்னேற்றும் இது உறுதி என்றார். குறிப்பாக தகுதியுள்ள அனைவருக்கும் உரிமைத்தொகை வழங்க தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். விடுபட்ட நபர்களுக்கும் உரிமைத்தொகை வழங்கப்படும் யாரும் வருத்தப்பட வேண்டாம் என்றதோடு விடுபட்டவர்கள் அதற்குரிய காரணங்களை நீக்கிவிட்டு அவர்களும் மகளிர் உரிமைத்தொகை பெறலாம் என்றார். என்.பஞ்சம்பட்டி கிராமத்தில் திமுக நிர்வாகிகள் ஒற்றுமையுடன் செயல்படுவது மனதிற்கு மகிழ்ச்சி அளிப்பதோடு வரும் பாராளுமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு அதிக வாக்குகள் பெறும் கிராமமாக என்.பஞ்சம்பட்டி உள்ளது என்றார். நிகழ்ச்சியில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தி.மு.க. தலை மைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி,

ஒன்றிய துணைச் செயலாளர் வசந்தா கென்னடி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ராஜகணேஷ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் தம்பா செல்வகுமார், திமுக நிர்வாகி டாஸ்மாக் வடிவேலு, முன்னாள் ஒன்றிய அவைத் தலைவர் வீரையா, என்.பஞ்சம்பட்டி முன்னாள் கிளைச் செயலாளர்கள் ராஜாமணி, ராபின், ரெமிஜோசப், முன்னிலை கோட்டை புலிப்பாண்டி, உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

நிறைவாக அரசு ஒப்பந்தகாரர் ஜீசஸ் அகஸ்டின் நன்றி கூறினார்.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

# திராவிட இயக்க வரலாற்றில் இந்த நாள் பொறிக்கப்படும்!

## கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம்!



**பே**ரறிஞர் அண்ணாவின்
பிறந்த நாளில்
பிறந்த மண்ணில்
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்
தொடங்கி வைக்கும்
கலைஞர் மகளிர்
உரிமைத் தொகைத் திட்டம்
தாய்க்குலத்தின்
சுதந்திரத்திற்கும்
சுயமரியாதைக்கும்
பக்கபலமிருந்து
தக்கபயன் நல்குவதாகும்

திராவிட இயக்க வரலாற்றில்
இந்த நாள்
குறிக்கப்படுவது மட்டுமல்ல
பொறிக்கப்படும்

இந்தியாவின்
பிற மாநிலங்களும்
தளபதி ஏற்றி வைக்கும்
இந்தத் திருவிளக்கில்
தீபமேற்றிக் கொள்ளலாம்.



- கவிப்பேரரசு வைரமுத்து

### திருவண்ணாமலையில்

# பேரறிஞர் அண்ணா 115வது பிறந்தநாள் விழா ஊர்வலம்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது!

*திருவண்ணாமலை, செப். 16-*

திருவண்ணாமலையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாள் விழா ஊர்வலம் நடைபெற்றது. பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு கலந்து கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தனார்.

காஞ்சி தந்த காவியத் தலைவர் உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ் மொழி உணர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர், "இப்படைத் தோற்கின் எப்படை வெல்லும்" என்று தம்பியர் பெரும் படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் மெட்ராஸ் ஸ்டேட் என்ற பெயரை தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்து தமிழ்த்தாய்க்கு சிறப்பு செய்த தனிப்பெரும் தனயன் சுயமரியாதை சுடரொளி சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் எழுத்து வேந்தர், இந்திய தேசத்தின் மிகப்பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாள் ஊர்வலம் நேற்று (15.09.2023 - வெள்ளிக்கிழமை) காலை 9.00 மணியளவில் திருவண்ணாமலை, கடலைக்கடை சந்திப்பில் இருந்து மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்றது.

பிறந்தநாள் விழா ஊர்வலத்திற்கு பொதுப்பணித் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு தலைமை வகித்தார்.

சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட அவைத்தலைவர் த.வேணு கோபால், கழக மருத்துவர் அணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.என்.அண்ணாதுரை எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்ட துணை செயலாளர் மு.பெ.கிரி எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் எம்.எல்.ஏ, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா விஜயரங்கன், விஜியலட்சுமி ரமேஷ், மாநில தொ.மு.ச பேரவை செயலாளர் க. சௌந்தர ராஜன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பார்வதிசீனுவாசன்,

ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு. பன்னீர் செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தர பாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ. கோவிந்தன், ப.கேசவன், கோ. ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க. சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராம ஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த. மனோகரன், பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, ப.முருகையன், எம்.சீனுவாசன், மு.அன்பழகன்,

நகரமன்ற தலைவர் நிர்மலாவேல்மாறன், ஒன்றியக் குழு தலைவர்கள் கலைவாணி கலைமணி, பரிமளா கலையரசு, பூ.அய்யா கண்ணு, தமயந்தி ஏழுமலை, அன்பரசி ராஜசேகர், சாந்தி பெருமாள், நகரமன்ற துணைத்தலைவர் சு.ராஜாங்கம் மற்றும் கழக முன்னோடிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பிறந்தநாள் விழா ஏற்பாட்டினை நகர கழகச் செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன் செய்திருந்தார்.




பேரறிஞர் அண்ணா அவர்களின்115வது பிறந்தநாளை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்டக் கழகத்தின் சார்பில் துணைப் பொதுச் செயலாளர் – அமைச்சர் இ. பெரியசாமி திண்டுக்கல்லில் அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். உடன் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் ,பாராளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி மற்றும் கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை நெல்பேட்டையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் பொன் முத்துராமலிங்கம், வ. வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மேயர் இந்திராணி பொன் வசந்த், மா.ஜெயராம், தனச்செல்வம், ஒச்சு பாலு சின்னம்மாள், மூவேந்திரன், வக்கீல் ராகவன், முருகவேல், இளைஞர் அணி சௌந்தர்ராஜன், வட்டச் செயலாளர் பிஸ்மி மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# அன்னைத் தமிழ் உள்ளவரை அண்ணா வாழ்வார்!



**ஊ**ட்டுதமிழ் உணர்வுக்கோர் தென்றல் காற்று
ஒருவந்தம் தமிழ்ப்பகைமை முடிக்கும் கூற்று
நாட்டுதமிழ் மக்களுடை அன்பின் ஊற்று
நாடாரை யும்அணைத்துவென்ற மாற்று
கேட்கின்ற செவிகளுக்கோ இசைப்பண் பாட்டு
கிளர்ச்சிமறு மலர்ச்சிகளைக் களம்காண் மீட்பு
ஆட்சிதமி ழர்க்கீந்த அறிஞர் அண்ணா
அன்னைத்தமிழ் உள்ளவரை வாழ்வார் அண்ணா!

தந்தைபெரி யார்பள்ளிப யின்றார் நாற்றைத்
தான்பிடுங்கி நட்டார்போல் வளர்ந்தார் ஈடில்
விந்தைமாசில் ஆளுமையால் வென்றார் ஓங்கும்
விஞ்சுதி முகழகத்தை முதன்மை கண்டார்
செந்தமிழ்நம் எளியஏழை மக்கள் நெஞ்சம்
திசைவெல்லும் சமநீதி பூக்கச் செய்தார்
உந்தெழுச்சி யால்மாற்றம் தமிழர் கண்டார்
உலகுபுகழ் தமிழ்நாடு மலர்ந்த தம்மா!

என்றென்றும் தமிழ்தமிழர் இறையாண் மைக்கே
இருந்தர சோச்சும் கொள்கை குறிக்கோள் தந்தார்
நன்றுதம்பி மார்களுக்கே உரிமை ஈந்தார்
நனிகழகம் தலைசுமந்தார் கலைஞர் கோவே
வென்றறிஞர் அண்ணாவின் கழகம் காத்தார்
வினைத் திட்பத்தால் மீண்டும்ஆட்சி அம்மா
இன்றுமுதன் மைமுதல்வர் மு.க.இசுடாலின்
இருந்தமிழ் நம்கலைஞரண்ணா வழிவெல் ஆட்சி!

சாதிமத பேதங்கள் இல்லா ஆட்சி
சமநீதி சமஅறத்தின் சான்றாம் ஆட்சி
மோதிவரும் இடர்வெறியும் முறையைக் கற்சு
முதிர்குணத்துப் பெருந்தன்மை முதல்வர் ஆட்சி
யாதினிலும் மேம்பா டுடேஅறிஞர் அண்ணா
நம்பிக்கை உறவாடும் உயர்ந்த ஆட்சி
நீதிநெறி வழிவழியாய் நிமிரும் ஆட்சி
நிலைபெறுக அண்ணாவழி ஆட்சி மாதோ!



பெருங்கவிக்கோ
**வா.மு.சேதுராமன்**